சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு அரசு செய்து கொடுத்த வசதிகள்: முதல்வர் எடப்பாடி பட்டியல்

தி.மு.க. உறுப்பினரின் கேள்விக்கு பதில்

சென்னை, ஜூலை 19–

சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு தமிழக அரசு செய்து கொடுத்த வசதிகள் தொடர்பான பட்டியலை சட்டசபையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சட்டசபையில் இன்று காவல்துறை மற்றும் தீயணைப்பு துறை மற்றும் மீட்புப் பணிகள் துறை மானிய கோரிக்கையை மீது தி.மு.க. உறுப்பினர் ஐ.பெரியசாமி பேசும்போது, சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு அரசு போதுமான வசதிகளை செய்து கொடுக்கவில்லை என தெரிவித்தார்.

அதற்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்து பேசியதாவது:–

எம்.ஜி.ஆர். 1983ஆம் ஆண்டே சிலை திருட்டு தடுப்புப் பிரிவை ஏற்படுத்தியதோடு, திருக்கோயில்களில் இருக்கின்ற விலை மதிப்பற்ற சிலைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அந்த காலகட்டத்திலேயே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். அதுமட்டு மல்லாமல், திருக்கோயில்களில் உள்ள உலோகச் சிலைகள், ஆபரணங்கள், உண்டியல் மூலம் கிடைக்கப் பெற்றவை மற்றும் இதர விலை உயர்ந்தவைகளைப் பாதுகாத்திட, ஜெயலலிதா ஒரு தனி அமைப்பை திருக்கோயில் பாதுகாப்புப் படை என காவல் துறையில் ஏற்படுத்தி, கிரேடு 2 நிலையிலுள்ள 1,000 காவலர்களையும், 3,000 முன்னாள் ராணுவத்தினரையும் தமிழ்நாட்டிலுள்ள பல திருக்கோயில்களில் பணியமர்த்தினார்.

பொன். மாணிக்கவேல் சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் கடந்த 2012 முதல் 2015 வரை காவல் துறை துணைத் தலைவராகவும், 2015 முதல் 30.11.2018 வரை இத்துறையின் தலைவராகவும் பணியாற்றினார். 1.12.2018 முதல் இதே பிரிவின் சிறப்பு அதிகாரியாக உயர் நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டு, நாளது வரை இத்துறையின் சிறப்பு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார்.

மேற்கண்ட காலகட்டத்தில் 31 சிலை கடத்தல் வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் 13 வழக்குகளில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். மீதமுள்ள வழக்குகள் விசாரணையில் உள்ளன. இது தவிர, பல்வேறு காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 333 சிலை கடத்தல் தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்ற உத்தரவின்படி, காவல் துறை இயக்குநரால் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இவருடைய பணிக் காலத்தில் 7 வழக்குகளில் மட்டுமே நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்துள்ளார். 6 வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை பெற்றுள்ளனர். 1983 முதல் 10.2.2012 வரை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் 259 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. சராசரியாக, அந்த 28 வருட காலகட்டத்தில், 9 வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் பதியப்பட்டுள்ளன. இவருடைய பணிக் காலத்தில் சராசரியாக வெறும் 4 வழக்குகள் தான் பதியப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பொன். மாணிக்கவேல் சிலை திருட்டு மற்றும் கடத்தல் தடுப்புப் பிரிவின் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அப்பிரிவிற்கு அவர் கோரியபடி 4 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 7 துணை கண்காணிப்பாளர்கள், 18 ஆய்வாளர்கள், 45 உதவி ஆய்வாளர்கள், 13 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 125 இதர காவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு, அவர்கள் அப்பிரிவில் அறிக்கை செய்து அயற் பணியாக பணியாற்றி வந்தனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி சிறப்பு அதிகாரிக்கு நிதி மற்றும் வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பாக அரசாணைகளை அரசு வெளியிட்டுள்ளது. சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட காவலர்கள் எண்ணிக்கையானது 1 5– காவல் ஆய்வாளர்கள், 3 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 20 இதர காவல் ஆளினர்கள் ஆகும். உயர் நீதிமன்ற ஆணைக்கிணங்க 204 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட காவலர்களின் எண்ணிக்கையை விட 600 சதவீதத்திற்கும் அதிகமாக, குறிப்பாக உதவி ஆய்வாளர் முதல் கூடுதல் துணை கண்காணிப்பாளர் வரை இதற்கும் அதிகமான சதவீதத்தில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கான செலவானது, கடந்த 1.4.2017 முதல் 21.7.2017 வரை 24 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் ஆகும். இந்த செலவானது 21.7.2017 முதல் 30.11.2018 வரை 22 கோடியே 76 லட்சத்து 43 ஆயிரத்து 35 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் பிற காவல் பிரிவில் இருந்து சிலை திருட்டு தடுப்புப் பிரிவிற்கு அயல்பணியாக வந்த காவலர்களின் சம்பளம் மற்றும் வாகன எரிபொருள் செலவும் அடங்கும்.

சிலை திருட்டு தடுப்புப் பிரிவின் சிறப்பு குழுவிற்கு 31 நான்கு சக்கர வாகனங்களும், 29 இரு சக்கர வாகனங்களும், 15 வாக்கி டாக்கி கருவிகளும், 2 விஎச்எப் கருவிகளும், 15 கணினிகள், 12 யூபிஎஸ், 12 பிரிண்டர் (கலர் பிரிண்டர் உட்பட), 5 வீடியோ கேமிரா, 10 ஸ்டில் கேமிரா மற்றும் தேவையான மரச்சாமான்களும் சிலை திருட்டு கடத்தல் தடுப்புப் பிரிவின் சிறப்பு அதிகாரி காவல் துறை தலைவர், சிலை திருட்டு தடுப்புப்பிரிவின் பொறுப்பு அதிகாரியாக இருந்தபோதே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சிலை திருட்டு தடுப்புப் பிரிவு சிறப்பு அதிகாரி மற்றும் அவர்களின் தனிக் குழுக்கள் தங்குவதற்கு கமேண்டோ பள்ளி, திருச்சிராப்பள்ளி மற்றும் காவல் துறை துணை தலைவர், தஞ்சாவூர் அவர்களின் பழைய முகாம் அலுவலகம் வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம் நவீன கட்டுப்பாட்டு அறையில் 2 அறைகளும் மற்றும் ஒரு பெரிய ஹாலும் மற்றும் கிண்டியிலுள்ள பொருளாதார குற்றப் பிரிவில் சிறப்பு அதிகாரிக்கு அலுவலகமும் வழங்கப்பட்டுள்ளது.

தேவையான அனைத்து வசதிகளும்

திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறப்பு முகாமிற்கு ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு கணினி உதவியாளரும் அவருக்கு அன்றாடப் பணிகளில் உதவி புரிந்திட வழங்கப்பட்டுள்ளது. எனவே, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தேவைக்கேற்ப அவ்வப்போது அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பொன் மாணிக்கவேல் தனது 19.3.2018 தேதியிட்ட கடிதத்தில் தன் பிரிவுக்கு தேவை எதுவும் இல்லை என எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீது விசாரணை மேற்கொண்ட உச்ச நீதிமன்றம் 12.4.2019 தேதியிட்ட தனது உத்தரவில், தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டு மனு பகுதி அளவு ஏற்கப்பட்டு உள்ளதாகவும், அதன்படி சிலை கடத்தல் மற்றும் தடுப்புப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர் அபய் குமார் சிங் அப்பிரிவின் தலைமைப் பொறுப்பில் தொடர்வார் என்றும், வழக்குகளின் விசாரணை குறித்து அவ்வப்போது காவல் துறை கூடுதல் இயக்குநரிடம், சிறப்பு அதிகாரி பொன் மாணிக்கவேல் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், பொன் மாணிக்கவேல் தன்னிச்சையாக கைது நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர் என இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.6.2019 அன்று, சிலை தடுப்பு பிரிவு சிறப்பு அதிகாரி பொன். மாணிக்கவேல் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

தமிழகம், புதுச்சேரியில் 2 நாட்களுக்கு மழை நீடிக்கும்: சென்னை வானிலை மையம்

சென்னை, ஜூலை 19–

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய சென்னை வானிலை மைய இயக்குனர் புவியரசன், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 2 நாட்களுக்கு மிதமானது முதல் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனி, திருப்பூர், விருதுநகர், கன்னியாகுமரி, நெல்லை, கடலூர், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

சென்னையைபொறுத்தவரைவானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. கடந்த 24 மணி நேரத்தை பொறுத்தவரை கோவை மாவட்டம் சின்னகல்லாறில் 10 செ.மீ., வால்பாறை, கடலூரில் 9 செ.மீ., மழை பெய்துள்ளது. வெப்ப சலனம் காரணமாக மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியிலும், மேலடுக்கு சுழற்சி காரணமாக உள் மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும் என்றார்.

குளிக்க தடை

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்த கனமழை காரணமாக குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வேலூர் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் அண்ணா தி.மு.க. கூட்டணி வேட்பாளர் ஏ.சி. சண்முகத்தை ஆதரித்து குடியாத்தம் நகரில் வேலூர் மேற்கு மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சருமான கே.சி. வீரமணி வீதி வீதியாக சென்று பொது மக்கள் மற்றும் வியாபாரிகளிடம் அண்ணா தி.மு.க. அரசின் சாதனைகளை விளக்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நகர செயலாளர் ஜெ.கே.என். பழனி, ஒன்றிய செயலாளரும் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவருமான வி. ராமு மற்றும் பலர் உள்ளனர்.

அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இருந்து விலகிய மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பி.மகேந்திரபாண்டி, சேடப்பட்டி ஒன்றியச் செயலாளர் துரை. தனராஜன், கள்ளிக்குடி ஒன்றிய அவைத் தலைவர் மூலப்பொருள் ஆகியோர் நேரில் சந்தித்து, தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது, ஜெயலலிதா பேரவைச் செயலாளரும் மதுரை புறநகர் மேற்கு மாவட்டச் செயலாளரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார், மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் கி. மாணிக்கம் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறைச் செயலாளர் பி. பெரியபுள்ளான் (எ) செல்வம் எம்.எல்.ஏ., உசிலம்பட்டி ஒன்றியச் செயலாளர் பா. நீதிபதி எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

எம்பிஎஸ் லிமிடெட்
CIN: L22122TN1970PLC005795
பதிவு அலுவலகம்: RR டவர்ஸ் IV, 16/17, குப்பர் A, திரு–வி–க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு
கார்ப்பரேட் அலுவலகம்: C–35, செக்டார்–62, நொய்டா –201307. தொலைபேசி எண்: 0120–4599754.
Email ID: investors@mpslimited.com
Website: www.mpslimited.com

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 47(எ)படி இதர அலுவல்களுக்கு இடையே ஜூன் 30, 2019 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) பரிசீலித்து, ஒப்புதல் வழங்க கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் புதன்கிழமை, ஜூலை 24, 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் மற்றும் கம்பெனியின் சமபங்குகள் வெளியிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சுகள் அதாவது www.mpslimited.com, www.bseindia.com and www.nesindia.com ல் இந்த அறிவிப்பு உள்ளது.

எம்பிஎஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
சுனித் மல்ஹோத்ரா
சிஎப்ஓ மற்றும்
தேதி: ஜூலை 17, 2019 கம்பெனி செயலாளர்
இடம்: நொய்டா

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747,
Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 ஜூன், 2019ல் முடிந்த முதல் காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 30 ஜூலை 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்
தேதி: 19 ஜூலை 2019

படிவம் எண். INC-26

கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி)

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது தொடர்பான விஷயமாக பத்திரிக்கை விளம்பரம்.

மத்திய அரசு முன்பாக

(பிராந்திய இயக்குனர்) தென்பிராந்தியம்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13, துணைப்பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30, துணை விதி (5) மற்றும் பிரிவு (a)ன் விஷயத்தில்

மற்றும்

டெக்ஸ்மெக்ஸ் கியூசின் இந்தியா பிரைவேட் லிமிடெட், பதிவு அலுவலகம், 294–ஏ, அம்புஜம்மாள் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600 018 விஷயத்தில் .....விண்ணப்பதாரர் கம்பெனி

22 மே 2019 அன்று நடைபெற்ற வருடாந்திர பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ''தமிழ்நாடு மாநிலத்திலிருந்து மேற்கு வங்க மாநிலத்து''க்கு மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன்கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து எம்சிஏ–21 போர்டல் (www.mca.gov.in) க்கு முதலீட்டாளர் புகார் படிவத்தை அனுப்பலாம் அல்லது பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை, தமிழ்நாடு–600 006 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 14 நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள விண்ணப்பதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

''294–ஏ, அம்புஜம்மாள் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600 018''

டெக்ஸ்மெக்ஸ் கியூசின் இந்தியா பிரைவேட் லிமிடெட் சார்பாக
ஒப்பம்
இடம்: சென்னை ரமிட் பார்தி மிட்டல்
தேதி: 18.07.2019 இயக்குனர்
DIN: 01228624

சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.
பி.இ.சி.ப.வ. எண்:. அ6/385/2019.

கோவிந்தராசு. த/பெ. தங்கவேல், விளம்பார் கிராமம், கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் ... மனுதாரர்

.../அறிவிப்பு/...

மனுதாரர் கோவிந்தராசு என்கிற நான், எனது மகன் சசிதரன் என்பவர் விளம்பார் கிராமத்தில். 14/08/2014 ல் பிறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது மகன் சசிதரன் என்பவரின் பிறப்பு சான்று பள்ளி படிப்பிற்கு தேவைப்படுவதால், மேற்படி எனது மகன் சசிதரன் என்பவரின் பிறப்பு சான்று கேட்டு மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனைகளை இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டும் தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மேற்படி நீதிமன்றத்தால் ஒரு தலைபட்சமாக சான்று வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

த.கோவிந்தராசு
மனுதாரர்.

ஹரிதா சீட்டிங் சிஸ்டம்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாடோஸ் சாலை, சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28272233, தொலைநகல் : 044 - 28257121
இணையதளம் : www.haritaseating.com மின்னஞ்சல் : harita@haritaseating.com
CIN : L27209TN1996PLC035293

23வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

நிறுவனத்தின் பங்குதாரர்களின் இருபத்தி மூன்றாவது ஆண்டு பொதுக்கூட்டம் **செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 13, 2019, அன்று காலை 10.35 மணிக்கு கஸ்தூரி ஸ்ரீநிவாசன் ஹால் (மினி ஹால்), தி மியூசிக் அகாடெமி, எண் 168, (பழைய எண் 306), டி.டி.கே.சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014,** என்ற முகவரியில் மே 8, 2019 தேதியிட்ட ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை, வருகை பதிவு குறிப்பேடு மற்றும் பதிலி படிவங்கள் ஆகியவை கம்பெனி மற்றும் டெபாசிட்டரியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அங்கத்தினர்களுக்கு மின்வடிவில் (காகித வடிவில் கோரிய அங்கத்தினர்கள் தவிர) அனுப்பப்பட்டுள்ளன. கம்பெனி மற்றும் டெபாசிட்டரியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத அங்கத்தினர்களுக்கு இவை காகித வடிவில் அனுப்பப்பட்டுள்ளன. அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை ஜூலை 18, 2019 அன்று கம்பெனியால் அனுப்பி முடிக்கப்பட்டது.

வருடாந்திர அறிக்கை மற்றும் ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.haritaseating.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) இணையதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றில் கிடைக்கும். வருடாந்திர அறிக்கை கிடைக்கப்பெறாத அங்கத்தினர்கள் கம்பெனியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் கம்பெனி செயலாளருக்கு மேலே கூறப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் அல்லது கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு தங்கள் கோரிக்கையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட நாளன்று (ஆகஸ்ட் 6, 2019) காகித வடிவில் அல்லது மின் வடிவில் பங்கு வைத்திருக்கும் அங்கத்தினர்களுக்கு 23வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவேண்டிய தீர்மானங்கள் மீதான தங்கள் வாக்குகளை ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை தவிர தொலைவில் இருந்து மின்னஞ்சல் முறையில் NSDL நிறுவனம் மூலம் பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்;

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண வர்த்தகங்கள் மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படலாம்.
2. மின்னணு மூலம் வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: சனிக்கிழமை, ஆகஸ்ட் 10, 2019 காலை 9 மணி.
3. மின்னணு மூலம் வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஆகஸ்ட் 12, 2019 மாலை 5 மணி.
4. மின்னணு மூலம் வாக்குப்பதிவு திங்கட்கிழமை, ஆகஸ்ட் 12, 2019 மாலை 5 மணிக்கு மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் பின்னர் அதை மாற்ற முடியாது.
6. மின்னணு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில், வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் 6, 2019 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டமின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது திரு.K.ராமன், உதவி பொது மேலாளர்–பங்குகள், சுந்தரம்–கிளேட்டன் லிமிடெட், பங்கு மாற்று பிரதிநிதி, முதல் தளம், "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006, மின்னஞ்சல் raman@scl.co.in–ல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDLல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் காகித வாக்குப்படிவம் மூலம் வாக்களிக்க ஆண்டு பொதுக்கூட்டத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளான ஆகஸ்ட் 6, 2019 அன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் காகித வடிவில் வாக்களிக்க முடியும்.
11. B.சந்திரா & அசோசியேட்ஸ், தொழில் முறை கம்பெனி செயலாளர்கள் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-222-990 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை துணை தலைவர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட், டிரேட் வேர்ல்டு – ஏ விங்க், கமலா மில்ஸ் கம்பவுண்டு, லோயர் பாரேல், மும்பை – 400 013, மின்னஞ்சல் : evoting@nsdl.co.in, தொலைபேசி எண் (022) 2499 4587 அல்லது திரு.K.ராமன், உதவி பொது மேலாளர் – பங்குகள், சுந்தரம்–கிளேட்டன் லிமிடெட் மின்னஞ்சல் : raman@scl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. சரியான நேரத்தில் தகவல்களை பெற மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்ட்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

சென்னை
ஜூலை 18, 2019

ஹரிதா சீட்டிங் சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக
N. ஐஸ்வர்ய லக்ஷ்மி
கம்பெனி செயலாளர்

மக்கள் குரல் TRINITY MIRROR

வழங்கும்

இரு நாட்கள் இலவச திறன் மேம்பாடு, சிறு/குறு/ கிராமியத் தொழில் கடனுதவிகள், மானியம் குறித்த மாபெரும் பயிற்சி முகாம்

நாள் :
27 மற்றும் 28 ஜூலை 2019
காலை 10 மணி முதல்
மாலை 5 மணி வரை

இடம் :
JSS (Jan Shikshan Sasthan)
மக்கள் கல்வி நிறுவன அரங்கம், நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் எதிரே, சென்னை – 94.
போன் : 23745219

வேலை பெற, பயிற்சி பெற்று தொழில்/வணிகம் தொடங்க விரும்பும் ஆண்/பெண்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம். கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் பதிவு செய்து நேரம் பெற்றுக் கொண்டு வர வேண்டும்

*** மத்திய/மாநில அரசின் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் எவை? * லாபகரமான தொழில்கள் தொடங்க அரசு தரும் கடன்/ மானியங்கள் எவை? * மார்க்கெட்டிங்/ ஏற்றுமதி - இறக்குமதி செய்வது எப்படி என திறன், தொழில், வங்கி ஆலோசகர்கள் இலவச பயிற்சி வழங்குவார்கள்.**

நடத்துவோர்:
**மக்கள் கல்வி நிறுவனம்,